செ.வெ. எண்: 524 நாள்: 6.09.12

# செய்தி வெளியீடு

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 5.9.2012 அன்று தலைமைச் செயலகத்தில், சமூக நலத்துறையின் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சி திட்டப் பணிகளின் கீழ் இயங்கும் அங்கன்வாடி மையங்களில் முன் பருவக் கல்வி பயிலும் இரண்டு வயது முதல் ஐந்து வயது வரையுள்ள 2,01,032 குழந்தைகளுக்கு விலையில்லா வண்ண ஆடைகள் வழங்கும் திட்டத்தினை துவக்கி வைத்தார்கள். மேலும், 40 வயதுக்கு மேற்பட்ட ஏழ்மை நிலையில் உள்ள திருநங்கைகளுக்கு மாதம் ஒன்றுக்கு ஆயிரம் ரூபாய் ஓய்வூதியம் வழங்கும் திட்டத்தினையும் தொடங்கி வைத்தார்கள்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் கடந்த 14.06.2012 அன்று சட்டப்பேரவையில், அங்கன்வாடி மையங்களுக்கு இரண்டு வயது முதல் ஐந்து வயது வரையிலான குழந்தைகளை ஈர்க்கும் விதமாக 4 கோடியே 30 லட்சம் ரூபாய் செலவில் இரண்டு இணை வண்ண ஆடைகள் வழங்கப்படும் என்றும், இத்திட்டம் முதற்கட்டமாக சென்னை, வேலூர், திருச்சி, தேனி மற்றும் திண்டுக்கல் ஆகிய ஐந்து மாவட்டங்களில் செயல்படுத்தப்படும் என்றும், இதன் மூலம், 2,01,032 குழந்தைகள் பயன்பெறுவார்கள் என்றும் அறிவித்தார்கள். இதன்படி, 2 வயது முதல் 5 வயது வரையிலான குழந்தைகளை அங்கன்வாடி மையங்களுக்கு ஈர்க்கும் வகையில் அக்குழந்தைகளுக்கு இரண்டு இணை வண்ண உடைகள் வழங்கும் திட்டத்தினை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் ஏழு குழந்தைகளுக்கு வழங்கி துவக்கி வைத்தார்கள். இத்திட்டத்தின் கீழ் 1,02,540 ஆண் குழந்தைகளும், 98,492 பெண் குழந்தைகளும் பயன் பெறுவார்கள்.

2012–13ஆம் ஆண்டிற்கான சமூக நலத்துறை மானியக் கோரிக்கையில் 40 வயதுக்கு மேற்பட்ட ஏழ்மை நிலையில் உள்ள ஆதரவற்ற திருநங்கைகளுக்கு மாதம் ஒன்றுக்கு ஆயிரம் ரூபாய் ஓய்வூதியம் வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டது. திருநங்கைகள் நல வாரியம் மூலம் திருநங்கைகள் அடையாளம் காணப்பட்டு அவர்களுக்கு அடையாள அட்டைகள் வழங்கப்பட்டு வருகின்றன. இது வரை மொத்தம் 3125 திருநங்கைகள் அடையாள அட்டை பெற்றுள்ளனர். அவர்களில் 40 வயதுக்கு மேற்பட்ட

தகுதியுள்ள திருநங்கைகளுக்கு மாதந்தோறும் ஆயிரம் ரூபாய் உதவித் தொகை வழங்கும் திட்டத்தினை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் தொடங்கி வைத்தார்கள்.

நடப்பு ஆண்டில் திருநங்கைகளுக்கு மாதம் ஆயிரம் ரூபாய் ஓய்வூதியம் வழங்க 1 கோடியே 17 லட்சத்து 59 ஆயிரம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இந்நிகழ்ச்சியில், மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் அவர்கள், தலைமைச் செயலாளர், சமூகநலம் மற்றும் சத்துணவு திட்டத்துறை முதன்மைச் செயலாளர், சமூகநலம் மற்றும் சத்துணவு திட்டத்துறை இயக்குநர், ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்ட இயக்குநர் மற்றும் உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

* * * * * *

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9.
நாள்: 6.9.2012